Sri S. PAKKIRISAMY PILLAI : இம்மாதிரியான மின்சார வெட்டின் காரணமாக தொழிலாளர்கள்—முக்கியமாக பக்கிங்கரம் கர்நாடிக் மில் தொழிலாளிகள்—இவர்களுடைய சாப்பாட்டு நேரத்தை அரை மணி நேரமாகவும், முக்கால் மணி நேரமாகவும் குறைத்திருக்கிறார்கள். இம்மாதிரியான வெட்டு எப்பொழுது நீக்கி வைக்க முடியும்?

அதே சமயத்தில், இப்பொழுது புதிதாக இன்னொரு கட்டுப்பாட்டைக் கொண்டுவந்திருக்கிறார்கள், ஞாயிற்றுக்கிழமைகளில் தொழிலாளர்கள் வேலை செய்ய வேண்டும் என்று. அந்தக் கட்டுப்பாட்டை எதற்காகக் கொண்டு வந்தார்கள்? சரியான காரணம் என்ன வென்பதை மந்திரி அவர்கள் தெரிந்து சொல்ல முடியுமா?

The Hon. Sri V. RAMIAH : இந்தக் கட்டுப்பாட்டை நீக்க வேண்டுமென்றால் சென்னையைப் பொறுத்தவரை, மூன்றாவது 'எக்ஸ்டென்ஷன் ப்ளாண்ட்' வேலை செய்ய ஆரம்பிக்கவேண்டும். அது இந்த ஆண்டின் இறுதியில் வேலை செய்ய ஆரம்பிக்கும் என்று எதிர்பார்க்கின்றோம். கனம் அங்கத்தினர் கேட்ட இன்னொரு கேள்விக்கு என்ன பதில் என்றால், இப்பொழுது சமீபத்தில் "holiday staggering" என்ற முறையிலே சென்னையில் மின்சார சக்திக்கு இருக்கக்கூடிய 'டிமாண்ட்' டைப் கவனித்துப் பார்க்கிறபோது, இதுவரை தொழிற்சாலைகள் எல்லாம்—ஞாயிற்றுக்கிழமைகளில் விடுமுறை விட்டு வந்தன. இதனால் ஞாயிற்றுக்கிழமைகளில் மின்சார சக்தியை உபயோகிக்கவில்லை. அதனால் தேவை அதிகமாக இருக்கிற காரணத்தால், சில தொழிற்சாலைகளை ஞாயிற்றுக்கிழமைகளில் வேலை பார்க்கச் சொல்லி, அந்த மின்சார சக்தியை மற்ற தினங்களில் மற்ற தொழிற்சாலைகளும் உபயோகித்துக் கொள்ளக்கூடிய முறையிலே இந்தப் புதிய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த முறையும் மூன்றாவது எக்ஸ்டென்ஷன் ப்ளாண்ட் வந்தவுடனே கைவிடப்படலாம் என்று எதிர்பார்க்கிறோம்.

Sri A. A. RASHEED : When will the Madras Thermal Station go into commission?

The Hon. Sri V. RAMIAH : By the end of this year.

Sri S. PAKKIRISAMY PILLAI : சென்னையிலுள்ள எந்த எந்த தொழிற்சாலைகளில் ஞாயிற்றுக் கிழமை வேலை செய்வதாக இப்பொழுது ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்? அதற்குப் பதிலாக எந்த எந்த தினங்களில் விடுமுறை விடுவதாக ஒத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தயவு செய்து மந்திரி அவர்கள் சொல்ல முடியுமா?

9-20 a.m. **The Hon. Sri V. RAMIAH :** I do not have the details here Sir.

Sri K. VINAYAKAM : Whereas there is staggering of electrical energy due to paucity of power which can be justified in industrial areas like Perambur and Washermanpet, what is the necessity for staggering in places like Kodambakkam and Saidapet where there are not many industries?

The Hon. Sri V. RAMIAH : Staggering is for the whole State, not for the Madras City alone or for any industrial area. Even agriculturists are affected, as I said during the discussion on Demand for Electricity.